முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வரும் அரியலூர்-765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் கோவை-765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஆகியவற்றுடன் இந்த விருதுநகர் தொகுப்பு துணை மின் நிலையம் இணைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் 60 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையம் 2013 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சென்னை வடக்கு, சென்னை தெற்கு, வேலூர், விழுப்புரம், ஈரோடு, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய 9 தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் 21 மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவற்றில், தலா 20 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

மேலும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்குச் சொந்தமான ஆறு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் மற்றும் தொண்ணூறு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் ஆகியவற்றில் தலா 20 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின் மூலம் 2.52 மெகா வாட் அளவிற்கு சூரிய ஒளி மின்சாரம் கிடைக்கப்பெறும். சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்கள் சுமார் 26 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4,126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களின் வாயிலாக மின் உற்பத்தி அதிகரிப்பதுடன், சீரான மின் விநியோகத்திற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. எரிசக்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மின் துறை தொடர்பாக விதி 110-ன்கீழ்*

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை மனதார வரவேற்றுப் பாராட்டுகின்றேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் சிறப்பான நடவடிக்கைகள்மூலம் தமிழ்நாடு இன்று மின் மிகை மாநிலமாக முன்னேற்றம் கண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வலு சேர்க்கும் வகையிலே, இன்றையதினம் பல்வேறு மாவட்டங்களை மேம்படுத்தும் வகையில் அடுத்தடுத்து மின் அதிர்ச்சி அல்ல, இன்ப அதிர்ச்சியைக் கொடுக்கும் வகையில் அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கோதையாறு அணையில் புனல் மின் நிலையத்தின் 45 ஆண்டு கால ஆயுள் திறனை மேலும் 25 ஆண்டு காலத்திற்கு நீட்டப்படும் என்பதும், எதிர்காலத்திலே இதன்மூலம் 225 மில்லியன் யூனிட் மின்சார உற்பத்தித் திறன் திரட்டப்படும் என்பதும் பெருமகிழ்ச்சியை நமக்கு அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னையின் முன்னேற்றம், எதிர்கால மக்களின் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, சென்னையைச் சுற்றிலும் உள்ள நவீன சென்னையுடைய வளர்ச்சியைக் கருத்திலே கொண்டும் செய்யப்பட்ட அறிவிப்புகள் மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றன. மொத்தத்தில், இது 'படம் காட்டும் அரசு அல்ல, பவர் காட்டும் அரசு' என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களைக் கவர் செய்யும் அரசு' என்பதும், உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்புகளை மீண்டும் ஒரு முறை வரவேற்றுப் பாராட்டி அமர்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நா அசைந்தால் நாடு போற்றும் நல்ல பல திட்டங்களை அள்ளித் தரும் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய குடிசை வாழ் மக்களிலிருந்து, விவசாயப் பெருங்குடி மக்களிலிருந்து, மிகப் பெரிய ஆலைகள் வரை மிகப் பெரிய மின் தட்டுப்பாட்டுக்கு, மின் நெருக்கடிக்கு ஆளாகிய ஒரு நிலை 2006-லிருந்து 2011 வரை இருந்த தி.மு.க.வினுடைய அரசில் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-05

அந்த நிலையை மாற்றி, 2011-லே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்படி 2006-லே மின் மிகை மாநிலமாக அன்னை தாய்த் தமிழ் மண்ணை ஒளிரும் மாநிலமாக விட்டுச் சென்றார்களோ, 2011-லே அதே சூளுரையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மகத்தான திட்டங்களால், அவருடைய அறிவுரையால், மத்திய மின் தொகுப்பிலிருந்தும், சூரிய ஒளியிலிருந்தும், புனல் மின் நிலையங்களிலிருந்தும், தனியார் கொள்முதலிலிருந்தும் ஏறத்தாழ 8,432.5 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகப் பெறப்பட்டு, இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கோதையாறு-I புனல் மின் நிலையத்தை மேம்படுத்துவதற்கான திட்டம், சென்னை மற்றும் சென்னை புற நகரில் மின்மாற்றிகளை சுற்றுதர அமைப்புகளாக மாற்றும் திட்டம் ஆகியவற்றை வளர்ந்து வருகிற சென்னை புறநகர்ப் பகுதிகளின், எதிர்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு, இன்று விதி 110-ன்கீழ், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக, மாண்புமிகு உறுப்பினர்களோ, மக்கள் பிரதிநிதிகளோ, பொதுமக்களோ, யாரும் கோரிக்கை வைக்கவில்லை. அவ்வாறு கோரிக்கை வைக்காதபோது, மக்களுடைய குறைகளை, மக்களுடைய தேவைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்ந்தறிந்து, நுகர்ந்திருக்கிற அளவிற்கு உலகத்தில் வேறு எந்தத் தலைவரும் நுகர்ந்திருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய சின்னச் சின்ன தேவைகள், கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றை அறிந்து, தன்னுடைய ஆற்றலால் அந்தத் துன்பத்தைத் தீர்ப்பதற்கு சட்டமன்றத்திலே திட்டம் தருகிற ஒரே முதலமைச்சர், ஒரே ஆட்சித் துறைத் தலைவர், உலகத்திலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 17,000 மின் மாற்றிகளைப் புதிதாக யார் மாற்றச் சொன்னார்கள்? ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதியினை இதற்காக வழங்கியிருக்கிறார்கள்.

அதேமாதிரி, மின் தூண் பெட்டிகளைப் புதிதாக மாற்றும் திட்டம். சென்னையில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மின்சாரம் தடைபட்டது என்று எல்லோரும்

சொல்லக் கேட்டிருக்கிறோம். சென்னை மாநகரத்திலிருந்த அனைவருக்கும் இது தெரியும். அந்த மின் தூண் பெட்டிகளெல்லாம் நனைந்து, அதனால் மின் தடை ஏற்பட்டு, மின்சாரத்தை மின் நுகர்வோருக்கு உடனடியாகத் தர முடியாத நிலை ஏற்பட்டது. இதனை மாற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாக வந்த செய்தியைப் பார்த்துவிட்டு, மின் தூண் பெட்டிகளைப் புதிதாக மாற்றும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 38,844 பழைய மின் தூண் பெட்டிகளையும் மொத்தமாக மாற்றி, புதிய மின் தூண் பெட்டிகளை நிறுவும் திட்டத்தை, அறிவுசார்ந்த அந்தத் திட்டத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். ரூ.2,000 கோடியில் விருதுநகரில் மின்தொகுப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கயத்தாறு, கமுதி, தப்பகுண்டு ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்த, அப்பகுதிகளில் உள்ள துணை மின் நிலையங்கள் விருதுநகர் தொகுப்பு மின் நிலையத்துடன் இணைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதுபோல, சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க ரூ.26 கோடி நிதி தந்து, அனைத்துத் திட்டங்களுக்கும் மொத்தமாக சுமார் ரூ.4,126 கோடி நிதியை அள்ளித் தந்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழ்நாட்டில் மின்சாரத்திற்குத் தடையில்லை, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக உருவாக்கி, தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை இனி தென்னிந்தியாவிற்கு, ஏன் இந்தியாவிற்கே தேவைப்பட்டால், தருகிற அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் உற்பத்திக்கும், மின்சாரத் துறையை நவீனப்படுத்துவதற்கும் இன்று ரூ.4,126 கோடி நிதியை அள்ளித் தந்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்பை நான் மனதாரப் பாராட்டி, வரவேற்று, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் என்பது இன்றைய சூழ்நிலையில் மிக, மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உலகத்தில் இருக்கிறது. இன்றைக்கு

வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் தமிழகத்தில் தொழில்களைத் துவங்கவேண்டும் என்கின்ற ஒரு நம்பிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின்சாரத் துறை சார்பாக எடுத்த நடவடிக்கைகள்தான் ஏற்படுத்தியிருக்கின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்திலே வந்து, தொழில்களைத் துவங்கவேண்டும் என்ற நம்பிக்கை உருவாகியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தமிழகத்தை சற்று பின்னோக்கி நாம் திரும்பிப் பார்ப்போமேயானால், மாதக் கணக்கிலே மின் வெட்டு இருந்த தருணத்தில், அதை நிவர்த்தி செய்வேன் என்று உறுதியளித்து, முதலமைச்சராகப் பதவியேற்ற உடனேயே, அந்த நிலையை உருவாக்குவதற்காக அரும்பாடுபட்டு, அதை நிறைவேற்றிக் காட்டிய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதையும் தாண்டி, ‘ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்’ என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவினுடைய எண்ணங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது உலக உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, 75 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் ஏழையெளிய மக்கள் பயனடையக்கூடிய வகையிலே, 100 யூனிட் இலவச மின்சாரத்தை இந்தியாவிலேயே முதன் முறையாக அறிவித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

அதுமட்டுமல்லாமல், விசைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையிலும் ஒளியேற்றி வைத்திருக்கக்கூடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதையும் தாண்டி, இங்கே எண்ணற்ற நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, சென்னை புறநகர்ப் பகுதிகளிலே உள்ள 17,536 மின் மாற்றிகளை வளைய சுற்றுதர அமைப்புகளாக மாற்றியமைக்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள். என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட திருவாடனை தொகுதியிலே இருக்கக்கூடிய உப்பூரிலே தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுடைய, தொழிலாளர்களுடைய, தொழிலதிபர்களுடைய, தேவைகளை அறிந்து, மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் 1,600 மெகா வாட் அனல் மின் நிலையத்தை 12,778 கோடி ரூபாய் செலவில் அமைக்க, (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும்பொழுது, எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை, மக்கள் சார்பாக வரவேற்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, ஓர் அரசு எந்தவிதமான நலத் திட்டங்களை அறிவித்தாலும், அவை வெறும் அறிவிப்புகளாக மட்டும் இருப்பதை நாம் பார்த்திருப்போம். ஆனால், ஒரு திட்டத்தை அறிவித்தவுடன், அந்தத் திட்டம் 43 மாதங்களில் முடிக்கப்படும் என்கின்ற ஒரு திட்டவட்டமான அறிவிப்பை அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திட்டத்தை உருவாக்கும்பொழுதே, அந்தத் திட்டம் இவ்வளவு காலத்தில் முடிக்கப்பட்டு, அதன் பயன்கள் மக்களைச் சென்றடையும் என்கின்ற உத்தரவாதத்தைக் கொடுக்கக்கூடிய ஒரே முதல்வராக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இருக்கிறார்கள் என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களுடைய தலைமையிலே இயங்கக்கூடிய இந்த நல்லாட்சியிலே, மின்வெட்டு இல்லாத, மின் தட்டுப்பாடு இல்லாத, மின்மிகை மாநிலமாக நமது மாநிலத்தை உருவாக்க, மகத்தான சாதனை செய்தமைக்காகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மின் துறையிலே விதி 110-ன்கீழ் அற்புதமான திட்டங்களை அறிவித்தமைக்காகவும், ஒட்டுமொத்த தமிழக மக்களின் சார்பாகவும், என்னுடைய திருவாடனை தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய முக்குலத்தோர் புலிப் படையின் சார்பாகவும் மனமார வாழ்த்தி வரவேற்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதியில், கோதையாறு நீர் மின் திட்டம் குறித்து கடந்த 4 ஆண்டு காலமாக கோரிக்கை வைத்து வந்தேன். கோதையாறில் மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதங்களையும் அனுப்பியிருந்தேன்.

இன்றைக்கு, அந்தக் கோரிக்கை நிறைவேறியிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கோதையாறு நீர் மின் திட்டத்திற்குச் செல்லக்கூடிய சாலையும் 20 ஆண்டு காலமாகப் போடப்படாமல் இருந்தது. அந்தச் சாலை குறித்த விவரங்களையும் முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருந்தேன். தற்பொழுது, அந்தச் சாலையும் ரூ.90 இலட்சம் செலவில் போடப்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான், கோதையாறு நீர் மின் திட்டப் பகுதிக்குப் போகக்கூடிய அளவுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்பொழுது, அந்த இடம் முழுமையாக நவீனமயமாக்கப்பட்டு, சாலை போடப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த இடம், என் தொகுதிக்குட்பட்ட, பழங்குடி மக்கள் வாழக்கூடிய இடம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை ஒளியால் கழகத் தொண்டரைக் காக்கும் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நம்பிக்கை தீபமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் அரிய சாதனையால், சாதனை வெளிச்சம் சந்திர மண்டலத்தையே இன்று தொடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இல்லங்களிலும் ஒளி, மக்கள் உள்ளங்களிலும் ஒளி. (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணற்ற திட்டங்களால், இனிய ஒளி விளக்குகளின் சாதனை வெளிச்சத்தால், தமிழகத்தின் புகழ் வெளிச்சத்தை உலகறியச் செய்த உன்னதத் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில், தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுப்பது, "வாக்குகளைப் பெறுவதற்கு" என்று ஒருசில கட்சிகள் சொல்வார்கள். ஆனால், மக்களுடைய வாழ்வாதாரம் உயர வேண்டும், அவர்களுடைய

பொருளாதாரம் உயர வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, வாக்களித்த விரல்களில் இருக்கின்ற மை அழிவதற்கு முன்பாக, "100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் கொடுப்பேன்" என்ற வாக்குறுதியை நிறைவேற்றிக் கொடுத்த தாய், எங்கள் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, விசைத்தறி நெசவாளர்களெல்லாம் ஒரு காலத்தில் பொருளாதாரக் கஷ்டத்தில் இருந்தபோது, நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதன் முதலாக விலையில்லாத வேஷ்டி, சேலைகளை விசைத்தறியில் ஓட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். இன்றையதினம், அவர்களுக்கு 750 யூனிட் மின்சாரத்தை விலையில்லாமல் கொடுத்திருப்பதன் வாயிலாக, அந்தத் தொழிலாளர்களையும் பாதுகாத்தது எங்கள் தாய் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

ஒரு நாட்டிலே தொழில் வளர்ச்சி இருக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு முக்கியமாக தடையில்லாத மின்சாரம் இருக்கவேண்டும். கடந்த காலத்திலே, தொழில் நிறுவனங்கள் எல்லாம் பூட்டப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக வைத்திருக்கின்ற காரணத்தினால்தான், இந்தியாவிலே, அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பொருளாதாரத்திலும் சரி, தொழிலிலும் சரி, வளர்ந்து வருகின்ற மாநிலம் மாண்புமிகு அம்மா அவர்களின் மாநிலம் என்ற பெருமையை உருவாக்கிக் காட்டியிருக்கின்றார்கள்.

ஆக, மின்சாரத் துறையின் சார்பில் இன்றையதினம் அறிவித்திருக்கின்ற திட்டங்களை மனதாரப் பாராட்டுகிறேன். அதிலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், 765 கிலோ வோல்ட் தொகுப்பு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்கள் இதுகாறும் மத்திய அரசால் மட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே மாநில அரசால் மூன்று திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, இப்போது கூடுதலாக இன்னொரு திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள்

அறிவித்திருக்கிறார்கள். மின் பளுவின் காரணமாக மின் தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரம் உற்பத்தி செய்கின்றபோதே, அதற்கு வழித்தடத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை மின் நிலையங்களையும் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைய தினம் அறிவித்திருக்கின்ற நம்முடைய தாய், மாண்புமிகு அம்மா அவர்களை நான் போற்றி வணங்குகின்றேன்.

அதேபோல, சென்னையைப் பொறுத்தவரை, மின் தடை என்பது வேறு, மின்சார வெட்டு என்பது வேறு என்பதை நான் பல முறை சொல்லியிருக்கின்றேன். அதுகூட வெயில் காலத்திலே, summer காலத்திலே மின் தடை இருக்கக்கூடாது என்பதற்காக மின்மாற்றிகளை-transformersயை மாற்றி அமைப்பதற்காகவும், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை இன்றையதினம் சென்னை மாநகரத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஐந்தில் ஒரு பங்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற ஒரு மாநகரமாக சென்னை மாநகரம் இருக்கின்றது. இந்நகருக்கு எந்த விதத்திலும் மின் தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, தொலைநோக்குப் பார்வையோடு இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருப்பதன் வாயிலாக, சென்னை மாநகரம் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும் மாண்புமிகு அம்மா அவர்கள் நீடூழி வாழவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாழ்த்துகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நேரத்திலே வணங்கி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நானும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையின்மீது நீங்கள் விவாதம் செய்யமுடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதன்மீது விவாதம் எல்லாம் ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் பதிவாகாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், இதன்மீது விவாதம் ஒன்றும் இல்லை, (குறுக்கீடுகள்) விவாதம் ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்

உங்களைப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விவாதம் ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விவாதம் ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தாங்கள் இந்த அவையின் விதிகளைப் பற்றி விளக்கிச் சொல்வது நல்லது என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை இந்த அவையில் வெளியிடும்போது, அதைப்பற்றி எந்த வினாவும் எழுப்ப முடியாது; அதைப்பற்றி எந்த விளக்கமும் கேட்க முடியாது; (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி வேறு எந்தவிதமான கருத்தும் தெரிவிக்க முடியாது; வேண்டுமானால் நன்றி தெரிவிக்கலாம். அவ்வளவுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தாங்கள் புரிய வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் இந்த அவையின் மூத்த உறுப்பினர். நீங்கள் பல முறை இந்த அவையில் பார்த்திருக்கிறீர்கள். இருந்தும், இன்று நீங்கள் வேண்டுமென்றே பேசுகிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொன்னதுமாதிரி, விதி 110-ன் கீழான அறிக்கையின்மீது நீங்கள் எந்த விளக்கமும் கேட்கமுடியாது; எந்த விமர்சனமும் அதன்மேல் நீங்கள் வைக்கமுடியாது; ஒன்றே ஒன்று, நன்றி சொல்வதாக இருந்தால் மட்டும் நன்றி சொல்லலாம்; இல்லையென்றால் இல்லை. ஆகவே, திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் விதி 110-ன் கீழ் வெளியிட்ட அறிக்கையின்மீது விளக்கம் கேட்க முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்த விளக்கத்தை ஏற்று அமைதியாக இருங்கள்.

மனித சமூகத்திற்கு நீர் எப்படி அவசியமோ, காற்று எப்படி அவசியமோ, அதுபோல இன்றைக்கு மின்சாரமும் மிக அவசியமாகிறது. மாந்தர்தம் உள்ளத்து அக இருளைப் போக்க, அகல்விளக்காய்த் திகழும், கல்வி குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறும் இந்நாளில், புற இருளை விரட்டி, தமிழகம் ஒளிவிளக்காய்த் திகழ்ந்திட, 10 கோடி தமிழர்களின்உயர்

விளக்காய், குல விளக்காய், தமிழ்நாட்டின் உயர்வுக்கு கலங்கரை விளக்காகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மின் துறை குறித்த சிறப்பான அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

இந்தியாவிற்கே மின்சாரம் வழங்குகிற அளவுக்கு தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று தலைநிமிர்ந்து நடந்திட ஏற்றமிகு அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை
(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
–தொடர்ச்சி

— — —

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016-2017 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம் அவர்கள்.

***டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோரும், சான்றோரும் அலங்கரித்து, சட்டங்கள் இயற்றி, திட்டங்கள் தீட்டிய இந்த மாமன்றத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சட்டப் பேரவையினுடைய துணை சபாநாயகராக வாய்ப்பளிக்கப்பட்ட எனது தந்தையார் திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பணியாற்றிய இதே மாமன்றத்தில், கழகப் பணியும், மருத்துவப்